[1979 பிப்ரவரி 28

மதுராந்தகம் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

*137 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் வட்டத்தை மதுராந்தகம் வட்டம், செய்யூர் உப வட்டம் என்று பிரிக்க 1966-ல் ஏதேனும் ஆய்வு நடத்தப் பட்டதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மதுராந்தகம் வட்டத்தை, மதுராந்தகம் வட்டம், செய்யூர் உப வட்டம் என்று பிரிக்க அந்த மாவட்டக் கலெக்டர் ஆர்.டி.ஓ.-விடம் அது பற்றிய பரிந்துரையை அனுப்பும்படி கேட்டிருக்கிறார். அவரிடமிருந்து பரிந்துரை மாவட்டக் கலெக்டருக்கு வரவில்லை.

அரசு ஊழியர்களுக்குத் திருமணக் கடன்

*138 வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் திருமண செலவிற்காக முன்பு ஒதுக்கப்பட்ட தொகையைவிட தற்போது அதிகப்படியாகத் தமிழ்நாடு அரசு ஒதுக்கி உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஆம். வரவு-செலவுத் திட்ட நிதிஒதுக்கமாகிய ரூபாய் பத்து லட்சத்திற்கு மேற்பட்டு கூடுதலாக ரூபாய் பத்து லட்சத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, திருமணக் கடனுக எவ்வளவு ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்? இதிலே கிராம அதிகாரிகள், கிராம முன்சிப் போன்றவர்கள் பணியாளர்களா அல்லவா என்பது குறித்து வருத்தப்படுகிறார்கள். அவர்கள் பெயரையும் அரசாங்கப் பணியாளர்கள் என்று மாற்றியமைக்க சர்க்கார் உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: திருமணக் கடனுக, பெண்கள் அலுவலர்களாக இருந்தால், அவர்களுடைய திருமணத்திற்கோ, அல்லது அவர்களுடைய பெண்கள் திருமணத்திற்கோ, 15 மாதச் சம்பளம் அல்லது ரூ. 2,000 அதிலே எது குறைவோ அந்தத் தொகை என்ற அளவிலும், ஆண் ஊழியர்கள் என்று சொல்லக் கூடாது, அலுவலர்களாக இருந்தால், அவர்களுடைய திருமணத்திற்கோ அல்லது அவர்களுடைய ஆண் குழந்தைகள் திருமணத்திற்கோ ரூ. 1000 அல்லது 15 மாதச் சம்பளம் இதிலே எது குறைவோ அந்த அளவிற்கு, திருமணத்திற்காக முன் பணமாகக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இந்தத் திருமணக் கடன் அரசாங்க அலுவலர்கள் கடைநிலை ஊழியர்கள் வரையில் எல்லோருக்குமே கொடுக்கப்படுகிறது. தற்போது, நேற்றைய வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்படி, 'எய்டெட்' பள்ளிக்கூடங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் ரூ. 500 வரையில் கொடுக்கப்படும்.

1970 பிப்ரவரி 28]

திரு. பி. வேலுசாமி : தலைவர் அவர்களே, திருமணங்களுக்காகச் செலவிட்டு, பல குடும்பங்கள் அழிந்தே போய்விட்டன. ஆகவே, இப்படிப்பட்ட செலவுகளில் அதிகபட்சம், குறைந்த பட்சம் என்று ஏதாவது வரம்பு கட்ட சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் போன்ற முற்போக்குவாதிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள், திருமணங்கள் சிக்கனமாக நடத்தப்படவேண்டும், எளிமையாக நடத்தப்படவேண்டும் என்று ஒரு இயக்கமே நடத்த வேண்டும்.

திரு. வ. ஜார்ஜ் : அவைத் தலைவர் அவர்களே, திருமணக்கடன்கள், இப்பொழுது ஒரு சிலருக்கு மட்டும் வெறும், விளம்பரத்திற்காகக் கொடுக்கப்படுகிறது. தேவைப்படுகிறவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்படவில்லை. தேவைப்படுகிறவர்கள் எல்லோருக்கும் கொடுக்க அவர்களுடைய பிராவிடெண்ட் பண்ட் போன்ற நிதியிலிருந்தாவது கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : விளம்பரத்திற்காக என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். விளம்பரத்திற்காகக் கேள்வி கேட்கிறார்போலும் (சிரிப்பு). முதலில் நாம் நிதிநிலை அறிக்கையில் ரூ. 10 லட்சம் முன்கடன் கொடுப்பதற்காக ஒதுக்கினோம். அதில் நான்கு மாதங்களில், ரூ. 6 லட்சம் முன்பணமாகக் கொடுத்துவிட்டோம். அந்தப் பத்து லட்ச ரூபாயும் 4-10-1969-ஓடு மொத்தம் ஆறு மாதத்தில் இதற்காக நம்முடைய பட்ஜட்டில் செலவாகிவிட்டது. அது நம்முடைய முதல் வருட அனுபவம். மீண்டும் ஒரு பத்து லட்ச ரூபாய், ஏற்கனவே நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியதோடுகூட, 27-10--1969 அன்றைய நிதி இலாகா ஆணைப்படி, இன்னொரு பத்து லட்சமும் ஒதுக்கப்பட்டது. இதற்கு இன்னமும் சட்ட சபை அனுமதி பெறமுடியாமல், கன்டின்ஜெண்ட் பண்டிலிருந்து ஒதுக்கியிருக்கிறோம். அந்த 27--10--1969 அன்று ஒதுக்கிய பணமும் 21-11-1969-ஓடு கொடுத்து முடிந்துவிட்டது. இந்த இரண்டு மாதங்களில் போக்கு இப்படியிருப்பதைப் பார்த்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது முற்றிலும் தவறானது. மொத்தம் ரூ. 22,60,022 முன்கடனைக் கொடுத்திருக்கிறோம். அதனால் 1,846 பேர்கள் நடத்திய திருமண வைபவத்தில் அரசாங்கம் பங்கு கொண்டிருக்கிறது.

பர்கூர் மலையிலுள்ள பள்ளி

*139 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பர்கூர் மலையிலுள்ள மலைவாசிகளின் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.